பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

25 04 2024 **THURSDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மக்களவை தேர்தலுக்கான இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறுவதை ஒட்டி, முன்னேற்பாட்டுப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

2. நான்காம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

3. சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சி புனேயில் இன்று தேர்தல் அறிக்கையை வெளியிட்டது.

4. உலக மலேரியா நோய் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது..

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், பெங்களூரு இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது..

>>>><<<<

மக்களவை தேர்தலுக்கான இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறவுள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

12 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 88 தொகுதிகளுக்கு நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

கர்நாடகாவில் 14, ராஜஸ்தானில் 13, உத்திரபிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா எட்டு, மத்திய பிரதேசத்தில் 6, அஸ்ஸாம் மற்றும் பீகாரில் தலா ஐந்து, மேற்குவங்கம் மற்றும் சத்திஷ்கரில் தலா மூன்று, திரிபுரா, மணிப்பூர் மற்றும் ஜம்மு-கஷ்மீரில் தலா ஒரு தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது.

கேரளாவில் மொத்தம் உள்ள 20 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

கேரளாவில் 2 கோடியே 77 லட்சத்து 49 ஆயிரத்து 159 வாக்காளர்கள் இத்தேர்தலில் வாக்களிக்கவுள்ளனர்.

25 ஆயிரத்து 358 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மகளிர், மாற்றுத் திறனாளிகளுக்கென்று தனியாக வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், பசுமை வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த தேர்தலை ஒட்டி கேரளா முழுவதும் 41 ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே மூன்றாவது கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 94 தொகுதிகளில் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சி, புனேயில் இன்று தேர்தல் அறிக்கையை வெளியிட்டது.

சாதிவாரி கணக்கெடுப்பு, விவசாயிகள் நலன்களை முன்னெடுக்க தனியாக ஆணையம், மகளிருக்கு வேலைவாய்ப்பில் 50 சதவீத இடஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகள் இதில் இடம்பெற்றுள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

>>>><<<<

மக்களவை தேர்தல் நான்காம் கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

வேட்புமனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறும் என்றும், வேட்புமனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 29ஆம் தேதி கடைசி நாள் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆந்திராவில் 25 தொகுதிகளிலும், தெலங்கானாவில் 17 தொகுதிகளிலும், உத்தரபிரதேசத்தில் 13 தொகுதிகளிலும், மகாராஷ்ட்ராவில் 11 தொகுதிகளிலும், மத்தியப்பிரதேசம் மற்றும் மேற்குவங்கத்தில் தலா 8 தொகுதிகளிலும், பீகாரில் 5 தொகுதிகளிலும், ஜார்கண்ட் மற்றும் ஒடிசாவில் தலா 4 தொகுதிகளிலும், மற்றும் ஜம்மு காஷ்மீரில் ஒரு தொகுதி உட்பட 96 தொகுதிகளில் இந்த தேர்தல் நடைபெறவுள்ளது.

>>>><<<<

உத்தரபிரதேச மாநிலம், ஹத்ராஸ் மக்களவை உறுப்பினர் ராஜ்வீர் சிங் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 65.

அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, ராஜ்வீர் சிங்கின் மறைவு தமக்கு வேதனையளிப்பதாகவும், உத்தரபிரதேச மாநில மக்களின் வளர்ச்சிக்காக அவர் அயராது பணியாற்றியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அன்னாரது மறைவுக்கு குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>><<<<

உலக மலேரியா நோய் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

உலக சுகாதார அமைப்பினால் 2007-ஆம் ஆண்டு முதல் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

மலேரியா நோயை தடுப்பது, கட்டுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை தீவிரமாக செயல்படுத்தும் நோக்கில் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

சமத்துவமான உலகத்தை உருவாக்க, மலேரியா நோய்க்கு எதிரான செயல்பாடுகளை துரிதப்படுத்துவோம் என்பது இந்த ஆண்டுக்கான கருப்பொருளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவது குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று ஐ.நாவின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு கூறியுள்ளது.

இதுதொடர்பாக நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இயற்கை விவசாயத்தில் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு அதிகரித்திருப்பதாகவும், இதனால் பல நாடுகளில் மண்வளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்கள் எளிதில் கெட்டுப் போவதை தடுப்பதற்கு பயன்படுத்தப்படும் நுண்வகை பிளாஸ்டிக் பொருட்கள், சுற்றுச்சூழலுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்துவதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

இதனால், உணவுப் பொருட்களில் நச்சுத்தன்மை உள்ளதாகவும், உணவுக் குழாயில் இது பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

மீன் மற்றும் கடல்வளங்களை பாதிக்கும் அளவிற்கு பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு அதிகரித்திருப்பதால் உலக நாடுகள் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஐ.நா கூறியுள்ளது.

தற்போதைய நிலவரப்படி 59 நாடுகளில் வாழும் 28 கோடி பேர் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

நிலத்திற்கு கேடு விளைவிப்பதுடன், மண்வளத்தை முற்றிலும் மாற்றியமைத்து, பயிர் விளைச்சலை பாதிக்கும் அபாயம் உள்ளதால், பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்று அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

>>>><<<<

சேலம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக அதிக வெப்பம் பதிவாகி வருகிறது

இந்நிலையில், குருவம்பட்டி வன உயரியல் பூங்காவில் விலங்குகளை வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளை வனத்துறை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ்பைட் - விஜயகுமார் 48 செகண்ட்ஸ்)

>>>><<<<

சத்திஷ்கர் மாநிலம், தண்டேவாடா மாவட்டத்தில் 3 பெண்கள் உட்பட 18 மாவோயிஸ்ட்கள் காவல்துறையினரிடம் சரண் அடைந்தனர்.

சரணடைந்த மாவோயிஸ்ட்டுகளுக்கு மாநில அரசின் புனரமைப்பு திட்டத்தின் கீழ், அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்று அம்மாநில காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

உத்தரபிரதேச மாநிலத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

**Buxar** நெடுஞ்சாலையில் கார் ஒன்று, கட்டுப்பாட்டை இழந்து, மரம் மீது மோதியதில், இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

அருணாச்சலப்பிரதேச மாநிலத்தில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், அங்குள்ள நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால், சாலைகளை சீர் செய்ய 3 நாட்கள் ஆகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு ஆணைய அதிகாரிகள், நிலச்சரிவு ஏற்பட்டுள்ள பகுதிகளில் இன்று ஆய்வு மேற்கொள்கின்றனர்.

>>>><<<<

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் 150வது ஆண்டு விழாவும், சென்னை வானிலை ஆய்வு மையத்தின் 80வது ஆண்டு விழாவும் இன்று கொண்டாடப்பட்டது.

சென்னை, பள்ளிக்கரணையில் உள்ள தேசிய கடல் ஆராய்ச்சி தொழில்நுட்ப மையத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில், மத்திய புவிசார் அறிவியல் அமைச்சகத்தின் செயலர் டாக்டர். எம். ரவிச்சந்திரன் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், வானிலை ஆய்வு நடவடிக்கைகளில் அதிநவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதாகவும், இதனால் துல்லியமாக ஆய்வுகளை மேற்கொண்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

காலநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளை விரிவாக குறிப்பிட்ட அவர், பேரிடர் நிர்வாக நடவடிக்கைகளில் முன்கூட்டியே ஈடுபடுவதற்கு வானிலை ஆய்வு மையங்கள் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார்.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் டாக்டர் எம். மொஹபத்ரா, கடந்த ஆண்டுகளை விட தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்கள் விவசாயத்தையும், மக்களின் இயல்பு வாழ்க்கையையும் பாதிப்பதாக கூறினார்.

இதனை முன்கூட்டியே அறிந்து, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக வானிலை ஆய்வு மையங்கள், நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

புயல், மழை, வறட்சி, வெப்பம் குறித்த முன்னறிவிப்புகள் துல்லியமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக டாக்டர் மொஹபத்ரா கூறினார்.

இந்நிகழ்ச்சியில், மண்டல வானிலை ஆய்வு மையத்தின் 80 ஆண்டுகளின் சாதனைகளை குறிக்கும், சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

ஓய்வுபெற்ற வானிலை விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

>>>><<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், பெங்களூரு இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி ஹைதராபாத்தில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>><<<<

கனடாவில் நடைபெற்ற கேண்டிடேட்ஸ் செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற தமிழகம் திரும்பிய செஸ் வீரர் குகேஷுக்கு சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய செஸ் சம்மேளனம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

>>>><<<<

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே தோல்வியடைந்தார்.

>>>>END<<<<